**சுருக்கம்**

நிலம் – மன்னார்குடி நகராட்சி – நகரளவு எண்கள் 3825/2 மற்றும் சில –14.029815 ஏக்கர் நிலத்தை அரசு பொது மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணித் துறைக்கு ஒப்படை செய்யப்பட்டு முன்நுழைவு அனுமதி அளிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.260, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28.12.1995–ஐ ரத்து செய்தல் – மீண்டும் மேற்கண்ட 14.029815 ஏக்கர் நிலத்தை மன்னார்குடி நகராட்சி பெற்றுக்கொள்ள நகர்மன்றத்திற்கு அனுமதி அளித்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை

**அரசாணை(நிலை) எண்.72** **நாள் :6.05.2010**

படிக்க :

1. அரசாணை (நிலை ) எண்.260, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28.12.1995.

**மீண்டும் படிக்க:**

2. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் கடிதம் ந.க. எண். 92262/ திவ.1/5/01, நாள் 22.7.2006.
3. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடிதம் VI/6661/2003, நாள் 27.2.2007.

-----

**ஆணை:**

அரசாணை (நிலை ) எண்.260, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28.12.1995–ல் மன்னார்குடி கிராமம் நகரளவு எண்கள் 3825/2, 3826/2, 3827/1, 3827/3 மற்றும் கோப்பிராலயம் கிராமம் நகரளவு எண்கள் 4168/1, 4168/2, 4168/3, 4169 முதல் 4175 வரை, 4181/1 மற்றும் 4181/2 ஆகியவற்றில் ஆர்.சி.26/8A of 66, நாள் 18.1.1957–ன்படி தனியாரிடமிருந்து கிரயத்திற்கு வாங்கப்பட்ட, மன்னார்குடி நகராட்சிக்கு சொந்தமான 14.029815 ஏக்கர் நிலத்தினை அரசு பொது மருத்துவமனைக் கட்டிடம் கட்ட ஊரக நலப் பணிகள்/ பொதுப்பணித் துறைக்கு முன்நுழைவு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மன்னார்குடி நகராட்சியில், அரசு பொது மருத்துவமனை கட்டிடம் கட்ட அளிக்கப்பட்ட நிலம், நீர்த் தேக்கமாக இருந்ததாலும், அதனை செப்பனிட அதிக செலவாகும் என்பதாலும், ஏற்கனவே, மருத்துவமனை வளாகத்தில் உள்ள பழைய கட்டிடங்களை இடித்துவிட்டு, பழைய வளாகத்திலேயே புதிய கட்டிடங்கள் கட்டப்பட உள்ளதாலும் மன்னார்குடி நகராட்சியிடமிருந்து முன்னுழைவு அனுமதி பெறப்பட்ட 14.029 ஏக்கர் நிலத்தினை, நகராட்சிக்கே திரும்ப அளிக்க மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் தனது இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அரசின் அனுமதியை கோரியுள்ளார்.

3. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில், மன்னார்குடியில் அரசு பொது மருத்துவமனை கட்ட முன்நுழைவு அளிக்கப்பட்ட மேற்படி இடம் நீர்த்தேக்கமாக உள்ளதாலும், பழைய வளாகத்திலேயே புதிய மருத்துவமனை கட்டப்பட்டு உள்ளதாலும், பகுதி –II (Part II Scheme) திட்டத்தின் கீழ் மருத்துவமனை கட்டிடம் கட்ட நிலம் வாங்குவதற்கென்று பணம் ஒதுக்கப்படாததாலும், அரசாணை (நிலை) எண்.260, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28.12.1995–யில் கேட்புத் துறைக்கு முன்நுழைவு அனுமதி அளித்து ஆணையிடப்பட்டதை இரத்து செய்து ஆணையிடுமாறு திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டு, ஏற்கனவே முன் நுழைவு அனுமதி பெற்று, பல வருடங்கள் உபயோகப்படுத்தாமல் உள்ள நிலங்களை ஏதோ ஒரு காரணம் காட்டி, திரும்ப ஒப்படைக்கும் இம்மாதிரியான நேர்வுகளுக்கு அரசால் அபராதம் விதிக்கப் பரிந்துரை செய்துள்ளார்.

4. மேற்காணும் சூழ்நிலையில், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, மன்னார்குடி கிராமம் நகரளவு எண்கள் 3825/2, 3826/2, 3827/1, 3827/3 மற்றும் கோப்பிராலயம் கிராமம் நகரளவு எண்கள் 4168/1, 4168/2, 4168/3, 4169 முதல் 4175 வரை, 4181/1 மற்றும் 4181/2 ஆகியவற்றில் மன்னார்குடி அரசு மருத்துவமனைக் கட்டிடம் கட்ட முன்நுழைவு அனுமதி அளிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.260, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28.12.1995–யினை இவ்வாணை மூலம் இரத்து செய்வதுடன், மன்னார்குடி நகராட்சிக்கு சொந்தமான 14.029815 ஏக்கர் நிலத்தினை மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள் இயக்குநரிடமிருந்து, மீள மன்னார்குடி நகராட்சி பெற்றுக்கொள்ள மன்னார்குடி நகர்மன்றத்திற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள 14.029815 ஏக்கர் நிலத்தினை திரும்ப பெறுவது தொடர்பான செயற்குறிப்பினை திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி, உரிய ஆவணங்களில் திருத்தங்கள் மேற்கொண்டு அரசுக்கு தெரிவிக்குமாறு, மன்னார்குடி நகராட்சி ஆணையர் இவ்வாணை மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**//ஆளுநரின் ஆணைப்படி//**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம்,சென்னை–5
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை– 5.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம், திருவாரூர்.
இயக்குநர், மருத்துவப் பணி மற்றும் ஊரக நலப் பணிகள் துறை, சென்னை–6.
தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறை (க), சென்னை–5.
நகராட்சி ஆணையர், மன்னார்குடி நகராட்சி, திருவாரூர் மாவட்டம்.

<u>நகல்:</u> துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, சென்னை– 9.
பொதுப்பணித் துறை, சென்னை– 9.
வருவாய்த் துறை, சென்னை– 9.
நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை– 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை, சென்னை– 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**